CC.No. 145/2022
PW – 6
12.06.2026
பெயர் : குருநாதன்
த/பெ. : அழகுமுத்து
எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.
சாட்சி வீடியோ கான்பரன்சிங் மூலம் விசாரிக்கப்பட்டார்.

<u>குறுக்கு விசாரணை</u>

சம்பவ தேதியில் உதவி ஆய்வாளர் ராஜகோபால் என்பவர் நிலைய பொறுப்பு அதிகாரியாக இருந்ததால் அவர் இந்த வழக்கில் முதல் விசாரணை மேற்கொண்டுள்ளார். அந்த தேதியில் திருக்கோகர்ணம் காவல் நிலைய காவல் ஆய்வாளர் புதுக்கோட்டை நகர காவல் நிலையத்திற்கு பொறுப்பு அதிகாரியாக இருந்தபோதிலும் அவர் வேறு ஒரு வழக்கை விசாரணை மேற்கொண்டு வந்ததால் அவருடைய வாய்மொழி உத்தரவின்பேரில் உதவி ஆய்வாளர் ராஜகோபால் இந்த வழக்கில் முதல் விசாரணை மேற்கொண்டுள்ளார். இந்த வழக்கில் சாட்சிகளாக இடம் பெற்றுள்ள தனிநபர் சாட்சிகள் அனைவரும் இறந்துபோனவரின் உறவுக்காரர்கள் என்று சொன்னால் சரியல்ல. சம்பவ இடத்தை நான் பார்வையிட்டேன். விபத்து நடந்த இடத்திற்கு அருகில் ரோட்டில் சற்று தொலைவில் வளைவு உள்ளதா என்று கேட்டால் விபத்து நடந்த இடமே வளைவான ரோடுதான் ஆனால் எதிரே வரும் வாகனங்கள் நன்கு தெரியும் அளவிற்குதான் அந்த வளைவு உள்ளது. அந்த வளைவில் வாகனங்கள் சுமார் 40 கி.மீ வேகத்தில் திரும்ப முடியும். அந்த சாலை குறுகலான சாலையா என்று கேட்டால் அது சுமார் 30 அடி அகலம் கொண்ட சாலையாகும். இரு சக்கர வாகனத்தை ஓட்டி சென்ற இறந்துபோன இந்திரா என்பவருக்கு வாகன ஓட்டுநர் உரிமம் இருந்ததா என்று நான் விசாரிக்கவில்லை. விபத்து சமயத்தில் மேற்படி இந்திராவும், அவருடைய மகன் பவின் என்பவர் மட்டுமே பயணம் செய்துள்ளனர். இரு சக்கர வாகனத்தில் மேற்படி பவின் என்பவர் இருக்கைக்கு முன்புறம் நின்று கொண்டுதான் பயணம் செய்துள்ளார். மேற்படி இந்திரா என்பவரின் கவனக்குறைவினால் தான் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்று சொன்னால்

சரியல்ல. இறந்தவருக்கு கிடைக்க வேண்டி இழப்பீட்டை அவருடைய குடும்பத்தார் பெறவேண்டும் என்ற நோக்கத்தில் இந்த எதிரி மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கை சரிவர புலன்விசாரணை செய்யாமல் ஆவணங்கள் அனைத்தையும் காவல் நிலைத்தில் வைத்து தயார் செய்து எதிரிக்கு எதிராக பொய்யாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

Sd/– குருநாதன்

வீடியோ கான்பரன்சிங் மூலம் சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.